# யாழ்மாவட்டத்தில் காணிக்கச்சேரி ஆரம்பம் விண்ணப்பித்தோர் தொடர்பு கொள்ளவும்


காணி இல்லாதோருக்கு காணி வழங்கும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தின் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணிக் கச்சேரிகள் இடம்பெறவுள்ளன. காணி வேண்டும் என்று கோரி விண்ணப்பித்தவர்கள் காணிக்கச்சேரி இடம் பெறும் திகதிகளில் தேசிய அடையாள அட்டை ஜனசக்தி உரித்தாவணம், உணவுமுத்திரை போன்றவற்றுடன் அவ்வப்பகுதிகளுக்கு சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி மேற்குப் பகுதியினருக்கு 11-ம் திகதி காலை 9 மணி தொடக்கம் காணிக் கச்சேரி நடைபெறும். தென்மராட்சி கிழக்கு. மீசாலை வடக்குப் பகுதியினருக்கு கொடிகாமம் பிரதேசசபைக் காரியாலயத்தில் 16-ம் திகதி காலை 9 மணி தொடக்கம் காணிக் கச்சேரி நடைபெறும். வேலணைப் பகுதிக்கு மண்டைதீவு மகா — 8-ம் பக்கம் பார்க்க

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 62 சனி 07-04-1990 (பங்குனி 25) ரமழான் 10

## தலைவர் பிரபாகரன் வடமராட்சியில் தீருவில் நினைவு தூபிக்கு அஞ்சலி



விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்தார். இவர் அப்பகுதிகளில் உள்ள முக்கிய முகாம்களை பார்வையிட்டதுடன் வல்வை தீருவிலில் உள்ள குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட பன்னிரு போராளிகளினதும் நினைவுத் தூபிக்குச் சென்று அங்கு அஞ்சலி செலுத்தினர். இவரது விஜயத்தை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு செய்யப்பட்டது தலைவரின் வடமராட்சி விஜயம் பற்றி முன்னறிவிப்பு எதுவும் விடுக்கப்படாத போதிலும் இதனை அறிந்துகொண்ட பொது மக்கள் அங்கு திரண்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது

# விடுதலைப்புலிகளிடம் ஆயுதம்கேட்பது முட்டாள்தனமானது - ஜனாதிபதி

## இந்திய படையை ஆதரித்தவர்களுக்கு அமைச்சரவையில் இடமில்லை

விடுதலைப்புலிகளிடம் உடனடியாக ஆயுதங்களை கையளிக்குமாறு கேட்பது முட்டாள் தனமானது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். நேற்று கொழும்பில சிறிகோத்தாவில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைக் கூறியிருக்கிறார். புலிகளின் ஆயுத ஒப்படைப்பு குறித்து ஜனாதிபதி கருத்து வெளியிட்டது இதுவே முதல்தடவையாகும்.

விடுதலைப் புலிகள் கடந்த பதினேழு வருடங்களாக ஆயுதம் தாங்கிப் போராடி வருகிறார்கள். அவர்களை பேச்சுக்கு வரவழைத்ததே ஐக்கிய தேசியக்கட்சிக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும், இதனைச்செய்ய எந்த கட்சியினாலோ, தலைவரினாலோ முடியாதிருந்தது.

'ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ள விடுதலைப்புலிகளிடமிருந்து உடனடியாக ஆயுதங்களை களையுமாறு எதிர்க்கட்சியினர் கேடபது ஒரு முட்டாள் தனமான கோரிக்கை அப்படிச் செய்தால் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் இரத்த ஆறில் நீச்சலடிக்கவே எதிர்க்கட்சிகள் முனைகின்றன விடுதலைப்புலிகளுக்கு முதலில் நாம் அவகாசம் வழங்கவேண்டும்.' எனவும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.



'இந்தியப்படைகளை திருப்பி அனுப்ப எடுக்க வேண்டிய அரசியல் அணுகுமுறைகளை பரிசீலிப்பதும், இந்தியப் படை தொடர்பாக இருந்த பீதியை நீக்குவதுமே எனக்கு இடப்பட்டிருந்த முதல் பணியாக இருந்தது. இப்பணிகளை நிறைவேற்றவே 1989 இல் அமைச்சரவை அமைக்கப்பட்டது இப்

— 8-ம் பக்கம் பார்க்க

## அரச அலுவலகத்திலிருந்து கைக்குட்டைக் கடிதம்

கடிதவுறைக்குள் கைக்குட்டை அனுப்பிவைக்கும் வழக்கம் தற்போது யாழ்ப்பாணத்தில் நடைமுறைக்கு வந்துள்ளதுபோல் தெரிகிறது. ஏனெனில் சில தினங்களுக்கு முன்பு கந்தர்மடத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு நீளமான கடிதவுறையொன்று தபாலில்வந்தது, அந்தக் கடிதத்தை அப் பெண்மணி ஆவலுடன் பிரித்துப் பார்த்தபோது அதற்குள் அழகிய கைக்குட்டையொன்று காணப்பட்டதாம். இதில் என்ன விசேடமென்றால் அரச சேவையில் 'இலவசமாக' வந்த இக் கடிதத்தில் யாழ் மாவட்ட — 8-ம் பக்கம் பார்க்க

ரூபவாஹினி செய்தியில்

## அதிபரின படம மாறிவந்தது அதிகாரிகள் இருவர் வேலைநீக்கம்

ரூபவாஹினி செய்தியறிக்கையில் உலகத்தலைவர் ஒருவரின் படம் மாறிவந்தது. இதன் விளைவு இரு நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் வேலையி — 8 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை நகரத்தில் 'கோட்டிவலிகய'

முன்பு பிரச்சினைக்குரியதாக கணிக்கப்பட்ட சிங்களத் திரைப்படமான 'கொட்டி வலிகய' (புலியின் வால்) தற்போது திருகோணமலையில் திரையிடப்பட்டுள்ளது. எண்பதாம் மூன்றும் ஆண்டுக் கலவரங்களை மையமாக வைத்து எடுக்கப்பட்ட இத்திரைப்படம் நடிகர் காமினி பொன்சேகாவினால் தயாரிக்கப்பட்டதாகும். திருகோணமலையில் சுமார் ஏழு வருடங்களின் பின் சிங்களப் படமொன்று திரையிடப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# காங்கேசன்துறையில் ஷெல்வெடித்து இருவர் பலி

காங்கேசன்துறை ஐயனார் கோவிலடியில் நேற்றுகாலை 9 மணியளவில் இடம்பெற்ற ஷெல் வெடிப்புச் சம்பவத்தில் ஒரு சிறுவன் உட்பட இருவர் மரணமாகியுள்ளார்கள் அத்துடன் மேலும் ஒருசிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

50வயது மதிக்கத் தக்கவாச்சர் என்று அழைக்கப்படும்முதியவர் ஒருவர் எட்டுவயது —8-ம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்டத்தில்

# 80 சதவீதமான ஆசிரியர்களுக்கு கல்வியின் நோக்கம் தெரியாது

யாழ் - மாவட்டத்தில் எண்பது சதவீதமான ஆசிரியர்கள் கல்வியின் தன்மையையும், அதன் நோக்கங்களையும் நன்ருக அறிந்து வைத்திருக்கவில்லை. எழுத்து மூலமாக அவர்கள் சமர்ப்பித்தவற்றினை ஆய்வு செய்து இதனைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

இவ்வாறு யாழ் - கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கிய யாழ். தொழில் நுட்பச் சிரேஷ்ட கல்வியதிகாரி ச.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திரு.மு. இராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில், பாடசாலையில் கல்வியினை முடித்துக் கொண்டு வெளியேறுகின்ற மாணவர்களில் எத்தனை பேர் சான்றிதழ்களைப் பெற்ருர்கள் என்று கூறுவதன் மூலம் அல்ல நாம் பெருமைப்படுவது; எத்தனை பேர் எதிர்காலத்தில் தங்கள் வாழ்க்கையினை மேற்கொள்வதற்குத் தயாரான நிலையில் பாடசாலையை விட்டு வெளியேறுகிருர்கள் என்று கூறுவதன் மூலமே பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும் என்ருர். (47)


## இறுதி அறிவித்தல்

இதுவரை தங்களை வெளிவாரி மாணவர்களாகப் பதிவு செய்யத் தவறியவர்கள் 9.4.90க்கு முன்னர் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். குறிப்பிட்ட தீகதிக்கு பின்னர் வருபவர்களை எக் காரணம் கொண்டும் அனுமதிக்கமாட்டோம்.

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி.

148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(04056)



O/L DEC. 90

வகுப்புகளுடன் இம்முறை
9-ம், 10-ம் ஆண்டுகளுக்கான

## புதிய வகுப்புகள்

ஆரம்பம்: 10 - 04 - 1990

**BOND INSTITUTES**

58,A ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

04009


# ஆசிரிய பயிலுநர்களாக தெரிவானோருக்கு 'திசைகோள் உறுத்தல்' வகுப்புக்கள்

தற்சமயம் ஆசிரிய பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ''திசை கோள் உறுத்தல்'' பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவிருக்கின்றன இதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ் கல்வித் திணைக்களம் மேற் கொண்டு வருகின்றது.

மாதத்தில் மூன்று தினங்கள் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெற உள்ளன. ஏப்ரல் 10,11, 12, ஆகிய தினங்களிலும் மே. 05, 06, 19, ஆகிய தினங்களிலும் யூன், 02, 03, 16, ஆகிய தினங்களிலும் காலை 8.30 தொடக்கம் மாலை 3.30 மணி வரை இவ்வகுப்புக்கள் நடைபெறும்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய பயிலுநர்கள் பின்வரும் பாடசாலைகளில் பயிற்சிக்கு சமுகம் தரும்படி யாழ். பிராந்திககல் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவத்துறை, ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்திலும், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரி இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் டிறிப்பேக்கல்லூரியிலும், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் யாழ்: இந்து மகளிர் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும், தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் மகாஜனக் கல்லூரியிலும் சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் வட்டு. இந்துக்கல்லூரியிலும், கோப்பாய் உதவி அரசஅதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் இராமநாதன் கல்லூரியிலும், உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் மானிப்பாய்மெமோரியல் கல்லூரியிலும், பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் வடஇந்து மகளிர் கல்லூரியிலும், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் வேலாயுதம் மத்திய மகாவித்தியாலயத்திலும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8 30 இற்கு முன் சமூகமளிக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

## தளபாடம் இல்லாத பாடசாலைகள்

பாடசாலைகளில் போதிய தளபாடங்களில்லை. மாணவர்கள் நிலத்தில் அமர்ந்து கல்வி கற்கின்றனர். இப்படி பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்ட மாணவர்கள் வேறெங்குமில்லை தீவுப்பகுதியில்தான் உள்ளனர். தீவகப் பாடசாலைகளில் பலவற்றுள் அடிப்படைத் தேவையான மலசலகூட வசதிகள் இல்லை.

பாடசாலைகளின் திருத்த வேலைகள் நீண்டகாலமாகச் செய்யப்படவில்லை பல பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள் இல்லை. இவ்வாறு பல குறைபாடுகளுடன் கல்விக் கூடங்கள் இயங்கினல் தீவக மாணவர்கள் கல்வியில் முன்னேற இடமுண்டா என்ற கேள்வி எழுகின்றது. இவற்றை நீக்க கல்விப்பகுதியினர், பொது ஸ்தாபனங்கள் என்பன உடனடியாக முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடப்படுகிறது. (24)

## வட்டக்கச்சி பகுதியில் பஜனைப் போட்டி

கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் அதன் தலைவர் திரு க துரைராசா தலைமையில் வட்டக்கச்சி ஆலயங்களின் பஜனைக் கோஷ்டிகளிடையே போட்டி ஒன்று அண்மையில் நடாத்தப்பட்டது.

ஆன்மீக வள்ளல் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா பிரதம விருந்தினராகவும். சைவப்புலவர் க குமாரசாமி, கொத்தணி அதிபர் திரு ப. அரியரத்தினம், கிளிநொச்சி செயலகக் கணக்காளரும் இந்து இளைஞர் மன்றத் தலைவருமான திரு.கா.வீரசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் வட்டக்கச்சி அருள்மிகு கந்தசாமி கோவில் பஜனைக்குழு முதலிடத்தைப்பெற்றது

மறுநாள் சிவாலயத்தொண்டர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. கிளிநொச்சிச் செயலகத் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபரும் கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவருமான திரு.க துரைராசா தலைமையில் ஆரம்பமான ஆரம்ப விழா வட்டக்கச்சி கந்தசாமிகோவில் ஆலயக் குருக்கள் சிவ ஸ்ரீ கெங்காசிவக் குருக்களின் மந்திர பாராயணத்துடன் ஆரம்பமானது. தவத்திரு. கணேசானந்த மகாதேவ சுவாமிகள் (மகாதேவ ஆச்சிரமம், உருத்திரபுரம்) ஆசியுரை கூறினர். செயலகக் கணக்காளரும் இந்து இளைஞர் மன்றத் தலைவருமான திரு கா வீரசிங்கம் சிறப்புரை ஆற்றினர். வட்டக்கச்சி கொத்தணி அதிபர் திரு ப. அரியரத்தினம், சமூக சேவை உத்தியோகத்தர் பொன். நித்தியானந்தன் ஆகியோரும் உரையாற்றினர்கள். செல்வி சிவதரிசினி வீரசிங்கம் என்ற சிறுமி ஆலயச் சூழல் பற்றிச் சிறப்பாகப் பேசினர்.

கருத்தரங்கில் விசேட பேச்சாளராக: ஆத்மஜோதி திரு. நா முத்தையா, சைவப் புலவர் திரு.க. குமாரசாமி ஆகியோர் ''தொண்டர் தம் பண்பு'' ''சிவாலயத் தொண்டர்கள்'' என்னும் தலைப்பில் நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாகக் கருத்துரை வழங்கி சொற் பெருக்காற்றினர் அத்துடன் இவர்கள் பங்குபற்றியோரது வினக்களுக்கும் விடையளித்துச் சிறப்புறச்செய்தனர். இவ்விழாவில் பங்குபற்றியோர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டு சிறப்புடன் நடாத்தப்பட்டது

## இருதயபுரம் வீதி புனரமைப்பு

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட இருதயபுரம் வீதியை புனரமைப்பு செய்வதற்காக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாவினை மட்டக்களப்பு மாநகர சபைக்கு ஒதுக்கியுள்ளது


மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப் பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகள், யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர் மாடிக் கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து, கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|
| 1. யாழ்/ஸ்ரான்லி வீதிக்கிளை | (15. 10. 89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | | |
| 31. 03 83வரை அடகு வைத்தவர்கள். — | | 06. 04. 90 | வெள்ளி |
| 31. 03. 83ன் பின்பு அடகு வைத்தவர்கள் — | | 07. 04. 90 | சனி |
| 2. யாழ்/பிரதான வீதிக் கிளை புங்குடுதீவுக் கிளை. | (12 10. 89வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07. 04. 90 | சனி |
| 3. யாழ்/கன்னாதிட்டிக் கிளை சங்கானைக் கிளை. | (12 10. 89வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07..04. 90 | சனி |
| 4. யாழ்/நவீன சந்தைக் கிளை | (12. 10. 89வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06. 04. 90 | வெள்ளி |
| 5. சாவகச்சேரிக் கிளை பளைக் கிளை | (15. 10. 89வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06. 04 90 | வெள்ளி |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 1.00மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமூகம் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்ருேம்.

பிராந்திய முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

04055



யாழ்ப்பாணம்- கச்சேரி

(புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரிவு)

சேதமாக்கப்பட்டகட்டிடங்கள்விற்பனைக்கான

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சேதமுற்ற யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அலுவலக இருமாடிக்கட்டிடம் (நிலம் தவிர்ந்த கட்டிடம் சம்பந்தமான சகல பொருட்களும்) விற்பதற்கான கேள்விப்பத்திரப் படிவங்கள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரால் 1990 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்

இக்கட்டிடத்தைப் பார்வையிட விரும்புகிறவர்கள் புனர்வாழ்வு, புனரமைப்புப்பகுதித் திட்டப்பணிப்பாளர் (தொழிநுட்பம்) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அனரன் அல்பிரட்,
யாழ்ப்பாணம்- அரசாங்க அதிபர்.

செயலகம், யாழ்ப்பாணம்.
1990. 04. 04

04059

# இதயநாதம்

சனிக்கிழமை 07-04-1990

நல்வாக்கு

அழகு, அழகு என்றால் எது அழகு?
அன்புதான் அழகு; காருண்யம்தான் லாவண்யம்.
-ஜகத்குரு காஞ்சிப்பெரியவர்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## 'அபாய அழிவுகள்'

இயற்கை அன்னை தனது உக்கிரப்பார்வையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள். இதை எழுதி முடிப்பதற்குள்ளாகவே உலகில் இருபது ஹெக்டேயர் காட்டுப் பரப்பு அழிந்து விடும்.

இந்த வேகத்தில் சென்றால் அடுத்த நூற்றாண்டு நடுப்பகுதியில் காடு என்பது முன்னொரு காலத்தில்...... — என்ற கதையாகி விடும்.

அண்மையில் இலங்கையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி தென்னிலங்கையில் சிங்கராஜ வனமும், வடகிழக்குப் பகுதியில் உள்ள காட்டுப் பிரதேசங்களும் நாளொன்றுக்குக் கணிசமான அளவில் அழிக்கப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

வட கிழக்கைப் பொறுத்தவரைக் காடு அழிப்பு என்பது இயற்கையாகவும், செயற்கையாகவும் நடைபெற்று வருகிறது. இராணுவம் தனது கோபத்தைக்காட்ட நகரில் பொதுமக்களை அழிப்பதைப்போல் காடுகளில் தமது கோபத்தை மரங்கள் மீதே காட்டியது.

கடந்த வருடம் கூட முல்லைத்தீவுக் கரையோரப் பகுதிக் காடுகள் கிலோக்கணக்கான குண்டு வீச்சுக்களினால் எரிந்து நாசமாகியுள்ளன.

இப்பகுதியில் இருந்த மரங்கள் இனி மீண்டும் உருவாகும் என்பது சந்தேகம்தான். ஏனெனில் வெடி மருந்தில் உள்ள இரசாயனப் பொருட்கள் மண்வளத்தை நிச்சயமாகப் பாதித்திருக்கும்.

இவற்றைவிட அதிகரித்து வரும் எரிபொருள் தேவையைச் சமாளிக்கவே எமது பகுதியில் காட்டு வளம் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகிறது.

தற்போது சட்ட விரோதமாக மரங்களை வெட்டுவது கணிசமாகக் குறைந்துள்ள போதிலும் காடழிப்பு எங்கோ ஓர் மூலையில் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

எம் பகுதியில் உள்ள காடுகள், அயன மண்டலப் பருவக் காற்றுக் காடுகள் பருவ நிலைக்கேற்ப இசை வாக்கங்களைக் கொண்டவை. எனவே தளபாட உற்பத்திக்கு ஏலக் கூறிக்கொண்டும் கிழக்குப் பகுதியிற் சில காட்டுப்பிரதேசங்கள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

தொடரும் இத்தகைய காடழிப்புகளினால் சூழலில் வெப்ப அதிகரிப்பை நாம் தற்போது அனுபவ ரீதியாகவே உணருகின்றோம்.

பதினொரு வருடத்திற்கு முன் எம்பகுதியில் நிலவிய வெப்பநிலையிலும் தற்போது வெப்ப அளவு ஒரு டிகிரியால் அதிகரித்துள்ளதாகக் கணிப்பிட்டுள்ளனர்.

பெருமளவு காட்டுப்பிரதேசம் அழிக்கப்படுவதால் ஏற்படும் "பச்சை வீட்டு விளைவு" (Green house effect) தான் இதற்குக் காரணம்- மரங்களினால் உறிஞ்சப்படும் காபனீரொட்சைட்டின் அளவு குறையப் பூமியில் வெப்பம் கூடி விடும்.

எனவே நிலைமைகள் தற்போது சீரடைந்து வருவதால் வனப்பாதுகாப்பு அலுவலகங்கள் தூசி தட்டி மிக வேகமாகத் தமது பணிகளில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்குச் சகல உதவிகளையும் வழங்குவதாக அரசும் திரும்பத் திரும்பக் கூறி வருகிறது.

வட கிழக்குப் பகுதியில்; கிளிநொச்சி, அம்பாறைப் பகுதியில் கைவிட்ட மீள்வனமாக்கல் திட்டத்தை உடனடியாகவே மீளத் தொடங்கிக் காடுகள் அழிக்கப்படும் வேகத்தையாவது குறைக்கலாம்.

தற்போது காணப்படும்- நாம் நேரடியாகவே உணரும் வெம்மையைக் குறைக்கவாவது உடனடியாக நடவடிக்கையில் இறங்குமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகிறோம்.

---

**திருமணங்கள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒரு விதம்; இங்கோ சிலவிதம்**

# காலத்தால் அழியாத திருமணங்கள் மேலைத்தேயகோலத்தால்' அழிகிறது!

''இந்துக்களிடையே திருமணம் மிகவும் புனிதமாக நடைபெற்று வரும் சடங்காகும். இத் திருமணம் காலத்தின் கோலத்தால் கேலிக்குரிய சடங்காக மாறிவருகின்றது.

இந்துக்களின் திருமண பாரம்பரியம் மிகவும் போற்றுதற்குரியது. நாம் அறியாத தெரியாத பல விஷயங்களை எமக்கு எடுத்தியம்புகின்றது.

திருமணம் செய்து கொள்வதன் நோக்கம் திருமணம் செய்தால் கணவன் மனைவி எப்படி வாழவேண்டும். கணவனுக்குரிய பொறுப்புக்கள் கடமைகள் மனைவிக்குரிய

## ஸ்பெஷல் றிப்போட்

பணிகள் என்பனவற்றையெல்லாம் முறைப்படியான திருமணச் சடங்கு விளக்குகின்றது.

இன்றைய இளையதலைமுறையினருக்கு குருக்கள் தலைமையில் நடைபெறும் பாரம்பரிய திருமணம் வியப்பிற்கும் கேலிக்கும் உரியதாக இருக்கலாம். ஆனால் அந்தச் சடங்குகளை முறையாக அவதானித்து விளக்கத்தைப் பெறும் போது இந்து திருமணச் சடங்கு இவ்வளவு உயரிய தத்துவத்தைக் கொண்டதா என்று எண்ணத் தோன்றும்.

இப்படிச் சிறப்பு மிகு பாரம்பரிய திருமணச் சடங்கு முறை இப்போது காலத்தின் கோலத்தாலும் மேலைத்தேய கலாசார ஊடுருவலால் திசை மாறிச் சென்று கொண்டிருக்கின்றது.

எதிர்காலச் சந்ததி நவீன திருமண முறைதான் சரியானது என்று எண்ணக்கூடிய அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இப்போது வடக்கு கிழக்குப் பகுதிகளில் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு தனி மதிப்பு இருந்து வருகின்றது. மாப்பிள்ளை படித்தவராக இருந்தால் என்ன படிக்காதவராக இருந்தால் என்ன வெளிநாட்டில் இருந்தால் சரி அவருக்கு பெண் கொடுக்க பெண் வீட்டார் ஏட்டிக்குப் போட்டியாக இருக்கின்ற நிலை காணப்படுகின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யாழ் நகருக்கு அண்மையில் உள்ள... ஊரைச் சேர்ந்த ஒரு இளைஞன் கனடாவில் இருந்து ஐந்து வருடத்திற்குப் பின்னர் தாயகம் திரும்பினார்.

அவர் இலங்கைக்கு வரப் போகின்றார் என்ற செய்தி ஊரில் பரவியதும் பெண் வீட்டுக்காரர்கள் பலர் அந்த இளைஞனின் வீட்டிற்கு படை எடுக்கத் தொடங்கினர். மாப்பிள்ளை சொந்த மண்ணிற்கு வருவதற்குமுன்னே ... மாப்பிள்ளையை மருமகனுக்கப் போட்டி நடைபெறத் தொடங்கி விட்டது.

மாப்பிள்ளை வீட்டுக்காரருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர்களுக்கு ஒரு வழிதான் இருந்தது ... சீதனத் தொகையை அதிகரிக்கலாயினர். மாப்பிள்ளை பகிரங்க ஏலத்திற்கு விடப்பட்டார்.

ஏலத்தில் உச்சத் தொகையைக் கொடுக்கக் கூடியவர் தெரிவு செய்யப்பட்டார். மாப்பிள்ளையும் வந்தாகிவிட்டது அவசர அவசரமாக திருமணம் நடைபெற்றது.

மாப்பிள்ளை மேலைத்தேய உடையோடு கம்பீரமாக வர திருமணம் நடந்தேறியது. இந்து மதத்தில் கேக் வெட்டுவது என்பது இப்போது புதிதாக நுழைந்து விட்ட ஒன்று தான். கேக் திருமணத்தில் முக்கிய இடத்தைப் பிடித்து விட்டது. இந்தச் சம்பவத்தைப் பார்த்த ஒரு பெரியவர் ...காலப்போக்கில் இந்து மதத்திற்கென்று புதிய மேலைத்தேய பாரம்பரியம் ஒன்று உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று கூறி பெருமூச்சு விட்டார். அவரது பெருமூச்சு சிந்தனைக்குரியது தான்.

திருமணம் என்ற சடங்கில் மேலைத்தேயக் கலாசாரம் நுழைவதன் ஆரம்பப்படியைச் சுட்டிக் காட்டினோம். ஆனால் இப்போது திருமணம் நடக்கும் முறைகளை அறிகின்ற போது அதிர்ச்சியில் இருந்து மீள சற்று நேரம் பிடிக்கும்.

என்றாலும் "எம் காதுகளுக்கு எட்டியதும் நாம் நேரடியாகப் பார்த்த சில திருமண பந்தங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

மாப்பிள்ளை கனடாவில், பெண்ணோ தீவுப்பகுதியில். இந்த நிலையில் இக்கரைக்கும் அக்கரைக்கும் எபபடி திருமணம் நடக்கமுடியும் என்று மூளையைப் போட்டு உடைக்காதீர்கள்.

திருமணம் நடக்குமா என்றும் கேட்காதீர்கள்? நடந்திருக்கிறது. ஒரே நேரத்தில் கனடாவிலும் தீவுப்பகுதி ஒன்றிலும் நடந்திருக்கிறது.

## உதரன்

எப்படி? கனடாவிலே உள்ள மாப்பிள்ளை தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணின் படத்திற்குத் தாலியைக் கட்டியிருக்கின்றார். அதே நேரம் தீவுப் பகுதியில் உள்ள பெண் வீட்டில் மாப்பிள்ளையின் படத்தில் வைக்கப்பட்டிருந்த தாலியை எடுத்து பெண் தனக்குத் தானே கட்டிக் கொண்டார்.

பெண் தனக்குத் தானே தாலிகட்டும் போது கோவிற் குருக்கள் ஒருவர் வேத மந்திரங்களை ஓதி திருமணத்தை நடத்திவைத்தார்.

இப்போது வடபகுதியில் நடைபெறும் திருமணங்களில் ஒருவிதம் இது. காலத்தின் தேவையைப் பொறுத்து திருமணமுறை ஆச்சரியத்தில் மாறிவிட்டது.

இந்த திருமணச் சடங்கில் இருந்து மீளக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் உங்களை வேறு விதமான திருமணச்சடங்கு நடைபெற்ற இடத்திற்கு அழைத்துச்செல்ல விரும்புகின்றோம்.

அண்ணனும் தங்கையும் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் நம்புவீர்களா.... என்ன இப்படிப் பெரிய குண்டைத் தூக்கிப் போடுகின்றோம் என்றுதானே யோசிக்கின்றீர்கள்......அப்படி நினைக்காவிட்டால்...... "எங்களைப் பொய் சொல்லி ஏமாற்றுகின்றீர்களா? என்றுதானே கேட்கத் தோன்றுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முதல்"........." என்ற இடத்தில் எவருக்கும் தெரியாமல் சில உறவினர்கள் சூழ்ந்து கொள்ள செயற்கைத் திருமணம் நடைபெற்றது. மணமகன் மணமகளுக்குதாலிகட்டுவது போல படங்கள் பிடிக்கப்பட்டன. இக்காட்சி வீடியோவில் கூட எடுக்கப்பட்டது.

அண்ணனும் தங்கையும் திருமணம் செய்து கொள்ளக் கூடாதே. நெருக்கியஉறவினர்களுக்குள் திருமணம் செய்து கொள்வதால் பாதிப்புக்கள் உண்டு என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இப்படிச் செய்வதே விஞ்ஞான ரீதியில் பாதிப்பு என்றால் அண்ணனும் தங்கையும் திருமணம் செய்வது......!

அத்திருமணம் நடைபெற்றது என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் தம்பதிகளாக வாழ்வதற்குத்தான் திருமணம் செய்து கொண்டர்கள் என்று நினைத்து விடாதீர்கள்.

அண்ணன் கனடாவில் வசிக்கின்றார்... தங்கையையும் கனடாவிற்குள் கொண்டு செல்ல வேண்டும் தங்கை என்று கூறி அழைத்துச் செல்ல முடியாது. மனைவி என்று தகுந்த ஆதாரம் சமர்ப்பித்தால் சிலமாதங்களில் அழைத்துச் செல்லலாம்.

இதற்காகவே செயற்கைக் கலியாணம் நடைபெற்றது. வெளிநாடு செல்ல வேண்டும் என்பதற்காக திருமணச் சடங்குகள் எப்படி எப்படி எல்லாம் நடக்கின்றன.

இதைக் காணும் இளைஞர்கள் ஏன் சகோதர சகோதரிகள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று சிந்தித்து முடிவு எடுக்க முயற்சி மேற்கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை......

(தொடரும்)

> "
>
> ''எங்கட ஊரில நடக்கிற கலியாணங்களை 'அதிசயத் திருமணங்கள் என்ற பெயரில புத்தகமாக எழுதலாம் பாருங்கோ''
>
> -பிரபல எழுத்தாளர்
>
> ''எங்களின்ர பாரம்பரிய திருமணச்சடங்குகள் சிதைஞ்சு கொண்டு போகுது தடுத்து நிறுத்த யாரும இல்லையா.....?
>
> -கோவில் குருக்கள்
>
> "காலத்துக்கு ஏற்ப நாமும் மாறவேணும் பழைய வரட்டுவேதாந்தம் பேசிறதால பயன் இல்லை''
>
> -வெளிநாடு போகத் தயாராகும் பெண்
>
> "

# தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு பரிசு வழங்கத் திட்டம்

1987 ஜனவரி முதல் 1989 டிசம்பர் வரை ரூபவாஹினி, ஐ டி என் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்ட சிறந்த நிகழ்ச்சிகளுக்குப்பரிசளிப்பதற்கென ஓர் விழாவினை நடத்த ரூபவாஹினிக் கூட்டுத் தாபனம் தீர்மானித்துள்ளது.

நாடகத்தொடர். தனிநாடகம், விவரணம், விவரணநாடகம், இசை நிகழ்ச்சி, பல்சுவை நிகழ்ச்சி, கல்விநிகழ்ச்சி, நடப்பு விவகாரம் விளையாட்டு, சிறந்த செய்தி, ஒலி இணைப்புநிகழ்ச்சி, விளுடி விளம்பரம் ஆகியவற்றில்சிறந்தவை தெரிவுசெய்யப்படுவதோடு வரைபு கலைஞர், காட்சி அமைப்பாளர், ஒப்பனைக்கலைஞர், பின்னணி இசையமைப்பாளர், தொகுப்பாளர், ஒளிஅமைப்பாளர், ஒலி சேர்க்கையாளர் படப்பிடிப்பாளர், பாடகர்கள், பாடலாசிரியர்கள், நெறியாளர், பிரதியாளர்கள் ஆகியோர்களும் இப்பரிசில்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் இந்து இளைஞர் மன்றம்

முதன் முதலாக கடந்த மாதம் கிளிநொச்சிமாவட்டத்தில் இந்து இளைஞர் மன்றம் கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் திரு. க. துரைராசா அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஆன்மீக வள்ளல் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அவர்கள் பிரதம அதிதியாக வருகைதந்து ஆசியுரை வழங்கினர் கிளிநொச்சி கச்சேரிக் கணக்காளர் திரு கா, வீரசிங்கம் இந்து இளைஞர் மன்றத் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராகத் திரு. ரி சிவதட்சணாமூர்த்தியும், பொருளாளராக திரு. ரி. தங்கராசாவும், உப தலைவராகத் திரு. செ. குகதாசன், திரு. கு. பரராசசிங்கமும் தெரிவாகினர். மேலும் 9 நிருவாக சபை உறுப்பினரும் தெரிவாகினர்.

புதிய தலைவர் உரையாற்றுகையில், தமக்கு வழங்கப்பட்ட கடமைகளை சகலரது ஒத்துழைப்புடனும் செய்வதாகவும் இந்து இளைஞர் மன்றத்திற்கென ஒரு காணியைஅரசாங்க அதிபரிடம் பெற்றுக் கட்டிடம் அமைக்க முயல்வதாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல கிராமசேவையாளர் பிரிவுகளிலும் இந்து இளைஞர்மன்றக் கிளைகளைத் திறக் உத்தேசித்துள்ளதாகவும் சைவசமயிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி சமய ஈடுபாட்டை எற்படுத்த முயல்வதாகவும் குறிப்பிட்டார்.

# சுண்டிக்குளம்-வண்ணாங்குளம் வீதி விரைவில் அமையும்

வண்ணாங்குளத்தில் இருந்து சுண்டிக்குளத்திற்கு புதிய வீதி அமைக்கப்படவுள்ளது. இவ்வீதி அமைப்பதற்கான நடவடிக்கைகளில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் சர்வோதய இயக்கமும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வடமராட்சி கிழக்கில் உள்ள ஒவ்வொரு கிராம மக்களும் சிரம தான முறையில் இவ் வீதி அமைப்பதில் பங்கு கொள்ள வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வீதி அமைப்பதன்மூலம் வடமராட்சி கிழக்குப் பகுதி முல்லைத்தீவுப் பகுதியுடன் இலகுவாக போக்குவரத்துச் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று நம்பப்படுகின்றது.

## சுவையானசெய்திகள்

# ஆறு, ஆறு, ஆறு... ஆகாது

666 என்று மூன்று ஆறுகள் சேர்ந்தால்போல வந்தால், அது துரதிர்ஷ்டமாம். ஆபத்தை வருந்தி வரவழைப்பது போலவாம். ஏன் தெரியுமா? அது சனிக்கிரகத்தை குறிக்கின்றதாம் இப்படி ஒரு மூட நம்பிக்கை இங்கிலாந்து நாட்டில் இருக்கின்றது. எனவே மூன்று ஆறுகள் சேர்ந்து வரும்எண்களைக், கார்களைப் பதிவு செய்யும் போது கொடுக்கக்கூடாது என்று இங்கிலாந்து அரசாங்கம் அண்மையில் முடிவு எடுத்துள்ளது.

# கொடுத்துவைத்த குதிரை

காலி கூலா என்ற ரோமானிய மன்னன், தன்னுடைய அபிமான குதிரைக்கு முதல் பிரிவு ராஜாங்க தூதர் அந்தஸ்தை வழங்கியிருந்தான். 'இன்சிடாடஸ்' என்று அழைக்கப்பட்ட அந்தக் குதிரைக்கு 'வயின்' கொடுப்பதற்காக வென்றே தனியாக ஒரு தங்கக் கோப்பை செய்து கொடுத்தான். அந்தக் குதிரைக்கு தீனி வைப்பதற்காக தந்தத்தால் ஆன தொட்டி செய்து வைத்திருந்தான்.

# சாரதிகள் இனி தேவையில்லை

கி: பி. 2000 ஆண்டில் சாரதிகளே இல்லாத கார்கள் வந்துவிடுமாம் 'எலக்ட்ரானிக்கல் எக்ஸ்பர்ட்' ஒருவர் தரும் தகவல் இது. அதற்கான தொழில் நுணுக்கங்கள் இப்போதே இருக்கின்றதாம். இந்த முறையில் ரோட்டிற்குக் கீழே ஒரு வயர் செல்லும். கார் எப்படிச் செல்ல வேண்டும் என்று காரில் இருக்கும் கம்பியூட்டர் அதற்குச் சொல்லும். நாம் ஜாம் என்று காரில் ஏறி உட்கார்ந்து எங்கே போகவேண்டும் என்று மட்டும் சொல்லிவிட்டால் போதும் கார் நம்மை அங்கே கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்.

# விவசாயக் குழு ஆராய்வு

மாவட்டவிவசாயக் குழுக் கூட்டம் கிளிநொச்சிஅரசாங்க அதிபர் அலுவலக கூட்ட மண்டபத்தில் அரசாங்க, அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது

அக்கூட்டத்தில் நடப்பு ஆண்டுக்கான சிறுபோகநெல், உபஉணவுப் பயிர்ச்செய்கை, கிராமப்புற குளங்கள், விவசாயிகள் ஒய்வூதியத்திட்டமும் பயிர்ப்பாதுகாப்பும்தென்னைப் பயிர்ச்செய்கைக்காக 90'91ம் ஆண்டு காலபோக தென்னை விதையிடுல், கால்நடைப்பராமரிப்பு, நெல்கொள்வனவு விதைகள் சேகரிப்புநிலையம் ஆழ்துளைக் கிணறுகளும், உணவுஉற்பத்திக்கிணறுகளும் ஒன்றிணைக்கப்பட்ட கமநலத்திட்டம், இலங்கை மின்சார சபைக்கு மின் நிலுவை கட்டுதல் திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் செயல் முறைப்பராமரிப்பு வரி சேகரித்தல். விவரணப் பதிவேடு மீளாய்வும் ஏனைய பலஉட்பட விடயங்கள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. (35)

# நூலகத்திற்கு நூல்கள் தேவை

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழக நூல் நிலையத்திற்குச் சமூக, பொருளாதார, அரசியல் முதலிய துறைகளிலான நூல்கள் தேவைப்படுவதாக மறுமலர்ச்சிக்கழகத் தலைவர் திரு. பெ அருணோதயம் பொதுமக்களிடமும், பிரமுகர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நூல்கள் அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (36)

# கரவெட்டிப் பகுதி இரண்டாம் கட்ட கொடுப்பனவு

கரவெட்டி உதவி அரசாங்க அதிபரின் கீழ்உள்ள கீழ்க்காணும் கிராமசேவகர் பிரிவில் வசிப்பவர்களுக்கு மக்கள் வங்கியின் நெலலியடிக் கிளையின் ஊடாக இரண்டாம் கட்ட மீளக் குடியமர்தல் கொடுப்பனவு 1000 ரூபா இன்றும் நாளையும் (சனி, ஞாயிறு கிழமைகளில்) வழங்கப்படவிருக்கின்றது.

விபரம்வருமாறு:- 7-ம்திகதி சனிக்கிழமை கரவெட்டி கிழக்கு, அல்வாய்தெற்கு, துன்னாலைதெற்கு கிராம சேவையாளர் பிரிவுகள்.

8-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி மேற்கு, கரவெட்டி வடக்கு, துன்னாலை மேற்கு, கரணவாய் கிராம சேவையாளர் பிரிவுகள்.

# பொலிகண்டியில் நாளை...

பொலிகண்டி - கந்தவனக் கடவை அருள்மிகு சுப்பிரமணியர் கோயில் புதிய சித்திரத்தேர் அச்சு ஏற்றும் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறும் இதன் பொருட்டு பல விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மக்கள் வங்கியில் நிவாரணம்

மக்கள் வங்கி யாழ். பிரதான வீதிக்கிளையில் நாளை 8-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8. 30 மணி தொடக்கம் 1 .30 மணிவரை தொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புப் பணம் பின்வரும் பிரிவுகளுக்கு வழங்கப் படவுள்ளது.

காரைநகர்மத்தி, காரைநகர் கிழக்கு, காரைநகர் தெற்கு, நாரந்தனை, எழுவைதீவு, சுருவில் மற்றும் ஏற்கனவே பணம் பெறுவதற்கு குறித்த திகதியில் வராத கரவெட்டி, காரைநகர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் தங்கள் பதிவு இலக்கத்துடன் வருமாறு வேண்டப்படுகின்றனர்'

## முரசொலிக்கு வந்த கடிதம்

# உங்கள் கால்களை கொஞ்சம் உள்ளே வையுங்களேன

ஆசிரியர்,
முரசொலி,

மணற்காட்டிற்கான உபய கதிர்காம பாதையால் செல்லும் வாகனங்களின் அதி வேகத்தினுல் குறிப்பிட்ட பாதையில் உள்ள இரு கல்வி நிலைய மாணவர்களும், பாதசாரிகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றுர்கள். வாகனங்களில் ''லைற்'' ''பிறேக்'' போன்றவை காணப்படுவதில்லை, சில லொறி, ராக்டர்களில் ஒரு ''லைற்'' மட்டும் எரியும். பாதசாரிகள் மோட்டார் சைக்கிள் என நினைத்து அண்மையில் சென்று திக்குமுக்காடும் நிலைமை அடிக்கடி உண்டாகிறது. லொறியின் இருக்கைக்கு ஏறும் பாதையில் கால்களை வெளியில் நீட்டிக் கொண்டு இருக்கும் தொழிலாளிகளின் கால்கள் பாதசாரிகளை முட்டிக் கொள்வதும் உண்டு. இப் பாதையில் மூன்று விபத்துக்கள் நடந்து இரண்டு விபத்துக்களில் உயிரிழப்பு நடந்ததையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தம். எனவே சம்பந்தப்பட்டவர்களை சிவில் நிர்வாகம் கட்டுப்படுத்துமா?

புலோலி

க, கிறிஸ்
சு.வர்க்கம்

# கூட்டுறவுச்சங்கம் அதிகநேரம் திறக்க ஆவன செய்யப்படுமா?

ஆசிரியர்
முரசொலி

கடந்த கால வன்செயல்கள் காரணமாக தனியார் துறையினரும் கூட்டுறவுத் துறையினரும் வர்த்தக நிலையங்களை உரிய நேரத்திற்கு நடத்த முடியாது இருந்தது இதனுல் பாவனையாளர்களும் பொருட்கள் வாங்க முடியாத நிலையில் இருந்தார்கள். இந்த நிலை இன்று மாறிவிட்டது. இருந்தும் வடமராட்சி வடக்குப் பகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் வர்த்தக நிலையங்கள் உரிய காலத்தில் திறக்கப்படுவதும் இல்லை உரியகாலத்தில் பூட்டப்படுவதும் இல்லை அதவாது காலை 9 மணியில் இருந்து மதியபோசனத்தின் இடைவேளைக்கு பின் பிற்பகல் 6 மணி வரை இயங்கவேண்டிய சங்க கிளைகளை மாலை 5 மணிக்கே பூட்டி விடுகிறுர்கள். இதனுல் பாவனையாளர்கள் தொழில் துறைக்கு போய் நாளாந்த உழைப்பில் தங்கி வாழும் ஏழை பாவனையாளர் அதுவும் கிராம மக்கள் நாளாந்த பாவனைக்குரிய உணவுப் பொருட்கள் வாங்க முடியாது கஷ்டப்படுகிறுர்கள். இது தொடர்பாக பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டும் எதுவித பயனும் ஏற்படவில்லை. எனவே நாளாந்த ஏழை பாவனையாளர் நலன் கருதி கூட்டுறவுதுறைத் அதிகாரிகளோ அல்லது கூட்டுறவு சங்க இயக்குநர் சபை அதிகாரிகளோ இதுவிடயத்தில் கவனம் எடுப்பார்களா?

கலட்டி
பருத்தித்துறை

கே. குமாரலிங்கம்

யாழ் செயலகத்தில்

# 1010 வாகன அனுமதிப்பத்திரம் இதுவரைவழங்கப்பட்டுள்ளது

யாழ் செயலக இறைவரித் திணைக்களம் கடந்த மார்ச் 15 ம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் 1010 மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கிக்கிளையில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்த பின்னரே வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்றும் தமது வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரம் கோருவோர் செயலக இறைவரிப் பகுதியில் தாம் செலுதத வேண்டிய பணம் பறறிய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் செயலக இறைவரித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திரு பஞ்சாட்சரம் தெரிவித்தார். (36)

# கலாசார அவை வேலைகள் யாழ்ப்பாணத்தில் மும்முரம்

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கலாசார வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலாசார அவை அமைக்கும் வேலைகள் யாழ் மாவட்டத்தில் மும் முரமாக நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மேற்படி அவை அமைக்கும் வேலைகள் முற்றுப் பெற்று விட்டன சகல மாவட்டங்களிலும் இது அமைக்கப்படவுள்ளது. கலாசார அவையின் தலைமையகம் தர்மபுரத்தில் அமைந்துள்ளது.

# கொழும்பில் யாழ். மரக்கறிகள் இதனுல் இங்கு விலை அதிகம்

தென் பகுதிக்கு குடாநாட்டு மரக்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்டதையடுத்து யாழ். குடாநாட்டில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கரட், லீக்ஸ், பீற்றூட், உருளைக் கிழங்கு போன்றவை தற்போது லொறிகள் மூலம் தென் பகுதிக்கு அனுப்பப்பட்டுவருகின்றன.

இதையடுத்து குடாநாட்டில் விவசாய முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. விவசாயிகள் உற்சாகமாக விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

உ
சக்திமயம்

## மாதகல் - பாணுவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்

# தேர்த் திருவிழா சிறப்புமலர் - 07.04.90

யாழ்ப்பாணத்தின் வடமேற்கே சகல வளங்களும் நிறைந்த மாதகலிலே பாணுவெட்டிக் குளத்திற்கு அருகினிலே அமர்ந்து அனைவருக்கும் அருள் பாலித்து வருகிருள் "அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்" இன்றையதினம அம்பாள் சித்திரத்தேரினிலே பவனிவரும் நன் நாள் ஆகும்.

இந்தியாவில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்த காலத்தில் கி. மு. 2-ம் நூற்றுண்டில் இலங்கையிலிருந்து 2வது கஜபாகு மன்னன் அழைக்கப்பட்டான். விழாவில் பங்கு கொண்டுவிட்டு மன்னன் இலங்கை திரும்புகையில் ஞாபகார்த்த மாகக் கண்ணகி சிலையைக் கொண்டு வரும் பொழுது மாதகலில் உள்ள சம்புல் (சம்புக்கோலா) துறைமுகம் வழியாக வந்திறங்கி இராசவீதி வழியாகக் கண்டிக்குச் சென்ருன் என்றும், செலலும்பொழுது தங்கிய இடங்களில் எல்லாம் கண்ணகி ஆலயங்கள் கட்டப்பட்டன என்றும், இதன்படி முதலில் மாதகலில் தான் கண்ணகிக்குக் கோயில்கட்டப்பட்டது என்பதும் கர்ணபரம்பரக்கதை வழி வரலாறுகும்.

ஆறுமுக நாவலர் காலத்தில் மாதகலில் ஏரம்பையர் என்பவர் இருந்தார். இவர் நாவலர் பெருமானின் மாணவராவர். சைவத்திற்கு நெய்ஊற்றி வளர்த்த நாவலர் பெருமான் அவர்கள் மனித அம்சமான கண்ணகி விக்கிரகம் மூலமூர்த்தியாக இருப்பது ஆகமவிதிக்கு முரண் என்று அறிக்கை விட்டார். இதனுல் இவ்வாலயத்தில் கண்ணகி விக்கிரகத்தை மாற்றிபுவனேஸ்வரி அம்மனை மூலமூர்த்தியாக வைத்துப் பிரதிஷ்டை செய்து வழிபடலாயினர் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்று தாயுமானவர் அருளியபடி அம்பாள் ஆலயத்திலும் காஞ்சியிலுள்ள தலவிருட்சம்மா மரம் போல ஒரு மாமரம் தலவிருட்சமாக இருந்தது. அது பலவித காய்களைக் காய்த்து அடியார்களைப் பரவசப்படுத்தியது. அருகினிலே பாணுவெட்டிக் குளமும் அமைந்துள்ளது. இங்கு பண்டு தொட்டு விழா எடுத்துப்பொங்கலும் நடைபெற்று வந்தது. 16-ம் நூற்றுண்டு இலங்கையில் சைவம் தாழ்வுற்றிருந்த காலம், மேற்கு நாட்டவர் அதாவது போர்த்துக்கேயர் அட்டகாசம் புரிந்த காலம் கரைந்தது. போர்த்துக்கீசர் ஆட்சி முடிவுற்றது கண்ணகி முதியவள் வடிவம் பெற்று அன்பர் ஒருவரின் கனவினிலேகாட்சியளித்தாள். மறு நாள் அவ்வன்பர் உருக்கொண்டு பாணுவெட்டிக் குளத்தினின் றும் கண்ணகி சிலையை மீட்டெடுத்தார். இது கர்ணபரம் பரைக்கதையாகும்.

பழைய தேரினிலே அன்னைபவனி வருவதைச் சகிக்காத பக்தர்கள் தேர்த் திருப்பணிச்சபை ஒன்றை அமைத்துப்பல லட்சம் ரூபா சேர்த்துப் பரவசமூட்டும் பலவர்ணச்சித்திரத் தேரை அண்மையில் அமைத்தனர். இச் சித்திரத்தேரினிலே இன்று பவனிவரும் அன்னை புவனேஸ்வரி அம்பாள் அன்பர்களுக்கெல்லாம் அருள் பாலிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும் இவ்வாலயத்தின் உள்வீதியில் வீற்றிருக்கும் பரிவார மூர்த்திகளும் வழிபடுவோர்க்கெல்லாம் அருள் பாலிக்கின்றனர். உலகத் தோற்றத்திற்கு மாயை முதற்காரணம், சக்திதுணைக்காரணம், இறைவன் நிமித்தகாரணம் மாயை சக்தியின் துணையுடன் சிவத்தில் ஒடுங்குகின்றது, ஒடுங்கிய முறையே உலகம் தோன்றுகிறது.

ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் உலகத்தைப் படைத்தும் காத்தும் அழித்தும் தொழில்புரிய சிவபிரான் பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூர்த்திகளை. தோற்றுவிக்கின்றுர். படைத்தல் தொழில் கொடியேற்ற விழாவையும், சங்காரத் தொழில் தேர்த்திருவிழாவையும் அருளல் தீர்த்தத் திருவிழாவையும் உணர்த்துகின்றன. பாணுவெட்டி அம்மன் ஆலயத்தில் சக்தியின் திருவருட்பேற்றிஞல் பல திருப்பணி வேலைகள் நடைபெற்றன, நடைபெறுகின்றன. மேற்கொண்டும் நடைபெற இருக்கின்றன மெய்யடியார்களே மேற்கொண்டு நடைபெற இருக்கும் திருப்பணிகள் முடிவுபெற தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுமாறு வேண்டுகின்றனர் "பணிபுரிவேன் சக்தி திருவருளால் பிறவாப் பேரின்பம் எய்துவர்" என்பது உறுதி.


அன்னை அபிராமி தேர் ஏறிவரும் வேளையில்
வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேம்


**பற்றிமா ஸ்ரோர்ஸ் அன்
சுகிஜா வீடியோ சென்ரர்**
பிரதான வீதி,
மாதகல்

**நிர்மலா மில்ஸ்**
பிரதான வீதி
மாதகல்

**ஸ்ரீதுர்க்காரான்ஸ்போட் சேவிஸ்**
மாதகல் கிழக்கு
மாதகல்

**கணபதி களஞ்சியம்**
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு

கோழித்தீன் விற்பனையாளரும் உள்ளூர்
விற்பனைப் பொருள் கொள்வனவாளரும்
**T. K. V. சென்ரர்**
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு

### தேவி துதி

தனந்தருங் கல்வித்தருமொரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும்
நெஞ்சில் வஞ்ச மில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும்
அன்பர் என் பவர்க்கே
கனந்தரும் பூங்குழலான் அபிராமி
கடைக் கண்களே.

என்பது அபிராமி அந்தாதி. செல்வம் கல்வி வீரம் முதலிய நால் எல்லாவற்றையும் தருவது சத்தியின் திருவருள் நோக்காம்.


மாதகல் பாணுவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி
அம்பாள் அனைவருக்கும் அருள்பாலிக்க
வேண்டுகிறேம்

**அக்ரோ சென்ரர்**
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு

**சித்தி விநாயகா மில்ஸ்**
மாதகல் மத்தி
மாதகல்

உள்ளூர் விளைபொருள் கொள்வனவாளர்
**சிவாஸ் ஸ்ரோர்ஸ்**
சித்தி விநாயகர் வீதி
மாதகல்

சில்லறை, மொத்த விற்பனையாளர்
**கிருஷ்ணு ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி
பண்டத்தரிப்பு

அரிசி சில்லறை, மொத்த விற்பனையாளர்
**சுபா ரேடர்ஸ்**
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு


ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி

அடியவர் வினைதீர்க்கும் அன்னைபராசக்தியே! கடிதெனவந்து எங்கள் அல்லல் அகற்றும் தாயே!
இன்று சித்திரத்தேர் ஏறிவரும் உலக நாயகியாம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருட் கடாட்சம் தமிழ் மக்கள் எல்லோருக்கும் பலித்துப் பெருக அவளின் பாதார விந்தங்களை இறைஞ்சி நிற்கின்றேம்.

தர்மகர்த்தா
சு. விக்கிரமசிங்கம்

இங்ஙனம்
மாதகல் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்
இந்து தர்ம பரிபாலன சபை
மாதகல்

வடக்குக்கிழக்கில்

# 571 பாடசாலைகளைபுனரமைக்க 27 கோடி ரூபா நிதி உதவி

வடக்குக்கிழக்கிலுள்ள பாடசாலைகளை புனரமைப்பதற்கென ஆசிய அபிவிருத்திவங்கி 27 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இதில் 9 கோடி ரூபா ஏற்கனவே செலவிடப் பட்டுள்ளது இவ்வாண்டு மிகுதிப் பணத்தைக் கொண்டு புனரமைப்பு வேலைகள் மேற் கொள்ளப்படும்.

இது தவிர கனேடிய அரசு 8 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இதில் 3 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியைக் கொண்டு வடக்கு கிழக்கில் 571 பாடசாலைகளின் புனரமைப்புவேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மட்டக்களப்பில் 237 திருமலையில் 163, யாழ்ப்பாணத்தில் 63, மன்னாரில் 28, வவுனியாவில் 26, கிளிநொச்சியில் 23, முல்லைத்தீவில் 22, அம்பாறையில் 10, பாடசாலைகளில் சென்ற ஆண்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாண்டு ஜூன் மாதத்திற்குள் இவ்வேலைகள் முடிவடைய வேண்டும். வடக்கு கிழக்கில் மொத்தம் 1691 பாடசாலைகள் உள்ளன. இதில் 1423 தமிழ்ப் பாடசாலைகள். 268 சிங்களப் பாடசாலைகள்.

பிரேரணை பாராளுமன்றம் வருகிறது

## தொழில் இல்லாதோருக்கு 1000ரூபா அலவன்ஸ் வேண்டும்

தொழில் செய்வதற்குவேண்டிய தகைமைகள் இருந்தும் அதனைப் பெறமுடியாதிருக்கும் அனைவருக்கும் அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா அலவன்ஸ் வழங்கவேண்டும் என்ற பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த எம் பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடியே இப்பிரேரணையை கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

தொழில் புரிவதற்கான தகைமைகள் பெற்றிருந்தும் தொழில் பெருதோர் அவர்கள் வேலை ஒன்றினைப் பெறும் வரையில் 1000 ரூபா அரசியல் வேறுபாடுகள் இன்றி வழங்கப்பட வேண்டும் என இப்பிரேரணையில் கேட்கப்பட்டுள்ளது.

## உலக இஸ்லாமிய அமைப்பு அஷ்ரப்புக்கு 3 பதவிகள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்புக்கு உலக இஸ்லாமிய முன்னணித் தலைவர்கள் பொதுச்செயலகம் மூன்று பதவிகளை வழங்கியுள்ளது.

அஷ்ரப் கடந்த மார்ச்மாதம் 19-ம் திகதி திரிப்பொலியில் நடைபெற்ற மேற்படி முன்னணியின் மாநாட்டில் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. மேற்படி முன்னணியின் உதவிச் செயலாளர் நாயகமாகவும், நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராகவும் ஆசிய பிரதேசப் பொறுப்பாளராகவும் இவருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1980 பொது வேலை நிறுத்தத்தினுல்

## வேலை இழந்த அனைவருக்கும் வேலை வழங்கப் பிரேரணை

1980ஜூலை வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டதால் சேவையை விட்டு விலகியவர்களாக கருதப்பட்டு தொழில் இழக்கச் செய்யப்பட்டவர்கள் அனைவரும் சேவையில் அமர்த்தப்படவேண்டும் என்றபிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

இப் பிரேரணையில் மேற்படி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சம்பள நிலுவைகளும் பதவியுயர்வுகளும வழங்கப்பட வேண்டும் தொழில் இழந்திருந்த காலத்தில் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் அடங்கியுள்ளன.

## கம்பியூட்டர் பயிற்சிக்கு பாடத்திட்டம் தயாராகிறது

கல்வி அமைச்சின் தீர்மானத்தின் பிரகாரம் சகல உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் கம்பியூட்டர் கல்வி அளிக்கும் திட்டம் தொடர்பான பாடத்திட்டங்களைத் தயாரிக்கும் வேலைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன,

கம்பியூட்டர் கல்வி போதிக்கும் ஆசிரியர் தெரிவும் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான பூர்வாங்க வேலைகளும் தேசிய கல்வி நிறுவனத்திஞல் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன

இப்புதிய தேசிய கல்விக் கொள்கைத் திட்டம் 1991-ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் கட்டம் கட்டமாக அமுல் படுத்தப்படவிருப்பதாகவும் இத்திட்டத்தின்பிரகாரம் 6-ம் வகுப்புக்கான பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்படும் எனவும் தேசியகல்வி நிறுவன இயக்குநர் திலோக சுந்தரி தெரிவித்துள்ளார்.

## சேதமடைந்த நூலகங்கள் புனரமைப்புச் செய்யப்படும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதமுற்றிருக்கும் அல்லது செயலற்றிருக்கும் நூல் நிலையங்கள் அனைத்தும் புனரமைக்கப்படும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு கே நடராசா தெரிவித்தார் இதற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்தும், உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு மாகாண சபை ஒதுக்கிய நிதியிலிருந்தும் பெறப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

## 27 பேர் சித்தி

காரைநகர் கொத்தணியில் இருபத்தேழு பேர் 6 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளனர். மாணவர் தொகைக்கு ஏற்ப ஆசிரியர் இல்லாத போதும் 27 பேர் சித்திபெற்றது ஒரு சாதனை எனப்பாராட்டப்படுகின்றது.

நாற்பத்தாறு ஆசிரியர்கள் அக்கொத்தணிக்குப் போதாமை என்பது குறிப்பிடத்தக்கது. (37)

## கதிர்வீச்சு வைத்தியம்

கதிர்வீச்சு மூலம் மருந்து செலுத்தி நோய்களை அடையாளம் காணும் நவீன வைத்திய முறை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வைத்தியமுறை தற்போது பேராதனை' கொழும்பு பல்கலைக்கழகங்களிலே நடைமுறையில்உள்ளது.

## கிளிநொச்சியில் எழுச்சி ஊர்வலம்

கிளிநொச்சி வர்த்தகர் சங்கத்தினர் அன்னை பூபதி நினைவாக கிளிநொச்சி பஸ் நிலையத்தில் இருந்து எழுச்சி ஊர்வலமும் அடையாள உண்ணாவிரதமும் மேற்கொண்டனர்.

வர்த்தகர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டதுடன் பொது மக்களும் இவ் விழாவிற் கலந்து கொண்டனர், கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது இவ் அரங்கில் தொடர்ந்து கடந்த 19-ம்திகதி தொடக்கம் சுழற்சி முறை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (35)

## உணவு முத்திரை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 வது சுற்று உணவு முத்திரை கடந்த முதலாம் திகதி தொடக்கம் மாவட்டத்திலுள்ள பத்து உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி 5 வது சுற்றில் 13 கோடி 229 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் வழங்கப்படடுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப்பணிப்பாளர் திரு. இ. தியாகராஜா முரசொலிக்குத் தெரிவித்தார். (05)

## செழிப்பாக்கல்குழு நிர்வாகிகள்

மன்னார் விடத்தல்தீவு ஜனசக்தி 7-ம் வட்டாரஊர் செழிப்பாக்கல் குழுவின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- அ. பே. சிறில், செயலாளர்:- எஸ். கிறிஸ்தோஸ்தம், பொருளாளர்:- செ. செல்வராசா. [17]

## எருவிலில் புதிய கட்டிடம்

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள எருவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வகுப்பறைக் கட்டிடம் ஒன்றை அமைக்க மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 3 லட்சத்து 75 ஆயிரம்] ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# விளையாட்டுச் செய்திகள்

## யாழ் பிரிவு விளையாட்டுப்போட்டி

(விளையாட்டுத்துறை நிருபர் D. A. M குணசிங்கம்)

"யாழ் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றிருந்தன. ஆனுல் இவ்வருடம் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில், விசேடமாய் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற போட்டிகளில் கணிசமான அளவு வீரர்களும் வீராங்கனைகளும் பங்கு பற்றியமை நம் எல்லோருக்கும் உவகையும் உற்சாகமும் ஊட்டுவனவாய் உள்ளது. வீரர்களும் வீராங்கனைகளும் இத்துடன் நின்றுவிடாமல் மாவடடத்தில் நடைபெறும் போட்டிகளிலும் பங்குபற்றுவதுடன் தேசிய ரீதியில் நடைபெற உள்ள போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசில்கள் பல பெறவேண்டும் ஒவ்வொரு துறையிலும் மிகத் திறமை வாய்ந்த பயிற்றுநர்கள் நம்மிடம் இருக்கிருர்கள். அவர்களின் சேவையை நீங்கள் விரும்பும்போதெல்லாம் பெற்றுக் கொள்ள ஆகவேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன" என்று யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு மெய்வல்லுநர் போட்டியும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் விளையாட்டுத்துறை அதிகாரி கே. ஏகாம்பரம் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் கழகங்களுக்கு உதவி செய்வதில்லை என்ற தப்பபிப்பிராயம் பரவலாக நிலவுகிறது. பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும் எங்களுக்கு அமைச்சு தந்தால் தான் அதை பகிர்ந்து உங்களுக்கு தர முடியும், கடந்த காலங்களில் சூழ் நிலையைக் காரணம் காட்டி அவர்கள் எங்களுக்கு உதவாமல் இருந்திருக்கலாம். ஆனுல் இனியும் அப்படியிருக்கமுடியாது. நாங்கள் மாத்திரம் அமைச்சிடம் உதவி கோரினுல் போதாது நீங்களும் உ. அ. அதிபர்கள் மூலமாக, அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எங்களுக்கு உதவி கிடைக்கும்: அழுகிற பிள்ளைதான் பால் குடிக்கும் என்பதனை நீங்கள் மறந்துவிடக்கூடாது என்று கூறிஞர். மெய்வல்லுநர் போட்டியில ஆண்கள் பிரிவில் 44 புள்ளிகளைப்பெற்ற குருநகர் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் 27. 24 புள்ளிகளை முறையே பெற்ற சென். அந்தனீஸ் (பாஷையூர்) யாழ் றிம்மர் விளையாட்டுக் கழகம் ஆகியன இரண்டாம், மூன்ரும் இடங்களையும் பெற்றன. பெண்கள் பிரிவில். யாழ்றிமர் விளையாட்டுக்கழகம் 74 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், கிலின் கிங்ஸ் விளையாட்டுகழகம் 25 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் சென்ரேக் விளையாட்டுக்கழகம் 17 புள்ளிகளைப் பெற்று மூன்ரும் இடத்தையும் பெற்றன. சிறந்த வீரராக யாழ் றிம்மர் விளையாட்டுக்கழகம் வீரர் செப்பேட் மாட்டினும், சிறந்த வீராங்கனையாக அதே கழகத்தைச்' சேர்ந்த செல்வி. ஜீ. வறுசியாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பாரதி இல்லம் வெற்றி

நாஞட்டான் மகாவித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிகள், பெற்ரேர் ஆசிரியர்கள் சங்க அனுசரணையுடன் பாடசாலை அதிபர் திரு. அலெக்ஸ் தலைமையில் அண்மையில் வித்தியாலய விளையாட்டுத்திடலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் 310 புள்ளிகளைப் பெற்ற பாரதி இலலம் முதலாம் இடத்தையும் 305 புள்ளிகளைப் பெற்ற கம்பன் இல்லமும் 2 ம் இடத்தையும் 293 புள்ளிகளைப் பெற்ற வள்ளுவன் இல்லம் மூன்ரும் இடத்தையும் பெற்றன. பல வருடகால இடைவெளியின் பின் பாரதி இல்லம் முதல் இடத்தைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வைபவத்தில் விசேட அதிதிகளாக மன்ஞர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு செபநாயகம், பங்குத்தந்தைஅருட்திரு. ஸ்ரனி அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்: (16)

## காவலூரில் புத்தாண்டுப்போட்டி

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று மாபெரும் விளையாட்டுப் போட்டிகளையும், விளையாட்டு விழாவையும் நடாத்துவதற்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக உத்தியோகஸ்தர் திரு. நா. தனபாலசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார். இவ்விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகள் ஆண்கள் பெண்களுக்கான மரதன்; சாதாரண ஓட்டப் போட்டிகள், வலைப்பந்தாட்டப் போட்டிகள் என்பன நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (24)

## வடமராட்சி கிழக்குப் போட்டி

வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர்ப் போட்டிகள் அண்மையில் வடமராட்சிக்கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது ஆளியவளை கொடுக்கிளாய் வீதி சக்திவேல் விளையாட்டுக் கழகம் 49 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கேடயத்தைப் பெற்றுக்கொண்டது. செம்பியன்பற்று செம்பியன் விளையாட்டுக் கழகம் 40 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் 32 புள்ளிகளைப்பெற்று தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் மூன்ரும் இடத்தையும் 31 புள்ளிகளைப் பெற்று கட்டைக்காடு சன். மேரிஸ் விளையாட்டுக்கழகம் நாலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. ஆண்கள் பிரிவில் ஆளியவளை சக்திவேல் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் செம்பியன்பற்று செம்பியன் விளையாட்டுக்கழகமும் கூடுதல்ப் புள்ளிகளைப் பெற்று சம்பியன் கேடயத்தைப் பெற்றுக்கொண்டன. வெற்றி பெற்ற கழகங்களுக்கான வெற்றிக் கேடயங்களை யாழ் அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி அல்பிரட் அவர்கள் வழங்கிஞர். இருபது கழகங்கள் பங்குபற்றிய இவ்விளையாட்டுப் போட்டிககு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் அவர்களும் சிறப்பு விருந்தினராக உதவ் உரசாங்க அதிபர் (தலைமைப் பீடம் கச்சேரி) திரு. க. சண்முகநாதன் அவர்களும் கலந்துகொண்டனர். (18

# ரமழான் சிந்தனைகள்

## இஸ்லாம் கூறும் சுத்தம்

"மண்ணறையுடை (கப்ருடைய) வேதனை அதிகமாக சிறுநீர் கழித்த பின் சுத்தம் செய்யாததினால் தான் ஏற்படும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- தூய்மையாக இருந்து கொள்ளுங்கள். இஸ்லாம் பரிசுத்தமான மார்க்கமாகும்."

நபி (ஸல்) கூறினார்கள்:-

தூய்மையாக இருப்பது ஈமான் (நம்பிக்கை) யில் பாதியாகும்."

"உங்கள் வாய்களை எப்போதும் சுத்தமாகவே வைத்திருங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் அறிவுரை நல்கினார்கள்.

## சமூகத்தின் வறுமையை போக்க ஸகாத்தினை உபயோகிப்போம்

புகழ் பூத்த புண்ணியம் மிகு ரமழானின் இறுதிக் கட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கின்றோம். சில முஸ்லிம்கள் மீது (வசதிபடைத்தவர் மீது) கட்டாயமாக்கப்பட்டுள்ள ஸகாத்தினை வழங்குவதில் நம்மவர்கள் ஈடுபட்டிருக்கும் வேளையில் இவ்வாரம் சிந்தனையை அதுபற்றிச் செலுத்துவது பொருத்தமாக இருக்கும். தொழுகை, நோன்பு முதலிய கடமைகள் போன்று ஸகாத் இஸ்லாம் விதித்துள்ள கட்டாயக் கடமையாகும். எனினும் முன் கூறிய இரண்டிலும் செலுத்துகின்ற கவனம். ஆர்வம், ஸகாத விடயத்தில் நம்மவர்கள் காட்டுகிறார்களில்லை. வசதிபடைத்தவர்கள் இஸ்லாம் விதித்துள்ள கட்டளைப்படி தம்மிடமுள்ள பணத்துக்கு அல்லது உடைமைக்குச் செலுத்த வேண்டிய ஸகாத்தினைச் செலுத்தாவிடின் அத்தொகை அல்லது பொருள் அவருக்குரிய உடைமையாக இருக்காது. அது பிறருக்குரிய சொத்தாகிவிடும். பிறர் சொத்தை உண்பது நெருப்பினை உண்பதற்குச் சமமாகும். இதனை அநேகர் உணரத் தவறுவது கவலைக்குரியது. வேதனைக்குரியது. ஒவ்வொரு முஸ்லிமும் தன் உடைமையில் மற்றவர்களுக்காக வழங்கக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது, இதன்படி தம்மிடமுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஸகாத் கொடுத்தாகவேண்டும். இங்கு குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலாக இருந்து அவற்றுக்கு ஸகாத் வழங்காது அதனை நுகர்வதாயின் அது ஹறமானதாகும். நம்மில் வசதிபடைத்தவர்கள் அநேகர் ஏதோ பெயருக்காகச் சிறு தொகையை வழங்கிவிட்டு ஸகாத் வழங்கியதாகக் காட்டி விடுகின்றனர். வங்கிகளில் வைப்புச் செய்திருக்கின்ற பணத்துக்கு எத்தனை பேர் ஸகாத் வழங்குகின்றனர், வீட்டிலுருக்கின்ற தங்க, வெள்ளி ஆபரணங்களுக்கு எத்தனைபேர் ஸகாத் வழங்குகின்றார்கள்? சிலர் இவைபற்றி நினைத்துப் பார்ப்பதுமில்லை. ஸகாத்தினைச் சேகரித்து விநியோகிப்பது இஸ்லாமிய அரசாங்கம் ஒன்றின் கடமையாகும். இஸ்லாமிய ஆட்சி இல்லாத நாடுகளில் ஸ்தாபனங்கள் அதனைச் செய்யவேண்டும். நம் நாட்டின் ஓரிரு இடங்களிலே இன்று அப்படி நடப்பதனைக் காணலாம் பள்ளிப் பரிபாலன சபைகள் இக் கடமையைச் செய்ய முன்வரவேண்டும். பள்ளிப் பரிபாலன சபைகளுக்குப் பொறுப்பாக இருக்கின்ற முஸ்லிம் விவகாரத் திணைக்களம் எதிர்காலத்திலாவது பள்ளிப்பரிபாலன சபைகளை இதில் ஈடுபடுத்த முன்வரவேண்டும். முன்னேற்றம் காணாது வறுமைப் பிடியில் வாழுகின்ற நாம் சமூகத்தில் பெரும்பான்மையினருக்கு விமோசனமளிக்க ஸகாத்தினை உபயோகப்படுத்த முடியும். வீட்டுப் பிரச்சினை. தொழிற் பிரச்சினை. சுகாதாரப் பிரச்சினை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு உதவ இஸ்லாம் தருகின்ற சிறப்பான இந்தப் பொருளாதார முறையை உபயோகிக்க முடியும். அந்த நாள் உதயமாகுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

எஸ் ஏ.ஸி பர்ஹானா,
முஸ்லிம் பகுதி,
யாழ்ப்பாணம்.

## வட்டக்கச்சியில் நூல் வெளியீடு

அண்மையில் வட்டக்கச்சியில் மாயவனூர்கணபதீச்சரம் ஆலயத்தில் பளையைச் சேர்ந்த சிவ அன்பர் க குமாரசாமி புலவரினால் எழுதப்பட்ட "சிவராத்திரி புராணவசனம்", என்னும் நூல் வெளியிடப்பட்டது. இவ்வைபவத்திற்கு கிளிநொச்சி கச்சேரிக் கணக்காளரும், கிளிநொச்சிமாவட்ட இந்து இளைஞர் மன்றத் தலைவருமான திரு க.கா, வீரசிங்கம் அவர்கள் தலைமைதாங்கினார். இவர் சிவராத்திரியின் மகிமை பற்றி குறிப்பிட்டு இந்நூலாசிரியரின் 11 வது நூலாக வந்த இந்நூல் சைவ சமயத்திற்கு பெரும் தொண்டாக அமைகிறது எனக்குறிப்பிட்டார்.

திரு. மா. இராசநாயகம் வரவேற்புரையும், திரு.பொன் நித்தியானந்தன் (சமூகசேவை உத்தியோகத்தர்) நூல் வெளியீட்டுரையும் நிகழ்த்தினர். சிவ அன்பர் க. குமாரசாமிப் புலவர் பதில் உரையாற்றுகையில் சைவசமயத்தின் மகத்துவத்தையும் சிவராத்திரி மகிமையும் பற்றி விளக்கினார். திரு. த. சின்னையா முதற்பிரதியைப் பெற்று நூல் விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

## குறமகள் கதைகள் அறிமுகவிழா

கலை இலக்கியக் களத்தின் இருபத் தெட்டாவது ஒன்று கூடல் குறமகள் கதைகள் அறிமுக விழாவாக நடைபெறவுள்ளது

இவ்விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் திருமதி கோகில மகேந்திரன். திரு க. பரஞ்சோதி, திருமதி பா. இந்திரநாதன் திருமதி. மௌ சித்திரலேகா' திரு ?.நடராசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

# நெடுமாறன் குஜ்ராலிடம் தெரிவிப்பு

# வி. பி. சிங் அரசாங்கத்தை ஈழத்தமிழர் வரவேற்கின்றனர்

பிரதமர் வி. பி சிங் தலைமையிலான இந்தியத்தேசிய அரசாங்கம் முன்னைய அரசைப் போன்றில்லாது. சிறந்த நேர்மையான அரசியல் வாதிகளைக் கொண்டுள்ளது. என இலங்கைத்தமிழர்கள் தெரிவித்துள்ளதாகவும் இலங்கைத்தமிழர்கள் விடயத்தில் இந்தியா தனது கொள்கையை மாற்றிக் கொள்வது அவசியம் எனவும் திரு. ப. நெடுமாறன் இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ராலிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த காலச்சம்பவங்களை மறந்து விட்டு இந்தியாவுடன் பேச்சுவர்த்தை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன் விருப்பம் தெரிவித்துள்ளார் எனவும் திரு. நெடுமாறன் திரு, குஜ்ராலிடம் தெரிவித்ததாகவும் ஏ. எவ்.பி. செய்திஸ்தாபனம் தெரிவிக்கின்றது.

# ரஷ்ய- அமெரிக்க அதிபர்கள் உச்சிமாநாடு நடத்துவர்!

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷும், சோவியத் யூனியன் ஜனாதிபதி திரு. கொர்பச்சேவும் எதிர்வரும் மே மாதம் 30-ம் திகதிக்கும் ஜூன் மாதம் 3-ம் திகதிக்கும் இடையில் உச்சிமாநாடு நடத்துவர் என வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது

இரு வல்லரசுகளினதும் தலைவர்கள் உச்சிமாநாடு நடத்த கண்டுள்ள இந்த உடன்பாடு சர்வதேச ரீதியில் பல எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்துள்ளது.

இரு வல்லரசுகளுக்கும் இடையே சோவியத் யூனியனின் லிதுவேனியக் குடியரசு விவகாரநிலை உட்பட முக்கிய விடயங்களில் முரண்பாட்டு நிலை உள்ளது என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

லிதுவேனிய விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவது பிழையானது. அது எமது உள்நாட்டு விடயத்தில் நுழைவதாக முடியும் என சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியுள்ளது.

இரு தலைவர்களும் தமக்கிடையே நிலவும் கருத்துவேறுபாடுகளைச் சுமுகமாக தீர்த்துக் கொள்ள இந்த உச்சிமாநாடு உதவும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## கலாசார சுற்றுலா

சோவியத்தின் கலாசார பொழுதுபோக்கு அம்சங்களை காணும் சந்தர்ப்பம் விரைவில் கிடைக்கவுள்ளது.

இதன் நிமித்தம் ரஷ்ய - 'பலே' நடனக் குழு ஒன்றும், சோசலிஸ்ட் புரட்சி தினத்தில் பல்வேறு கலைஞர்கள் குழுவொன்றும் இவ்வருடம் இலங்கை வரவுள்ளன,

சமீபத்தில் இதற்கான கலாசார பரிமாற்ற ஒப்பந்தத்தில் ரஷ்ய அரசாங்கமும், இலங்கை- ரஷ்ய நட்புறவு சங்கமும் கைச்சாத்திட்டன.

கலாசார இளைஞர் பரிமாற்றங்களுடன்-சமூக- விஞ்ஞான நட்புறவை வளர்ப்பதோடு - ரஷ்ய பல்கலைக் கழகத்தில் இலங்கை மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களும் ஏற்பட இந்த ஒப்பந்தம் வழி வகுக்கும்.

## வழங்கப்பட்டது

நோன்புக் காலத்தை முன்னிட்டு சவூதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பேரீச்சம பழங்களை, கிண்ணியாவிற்கு திடீர் விஜயம் மேற் கொண்ட வர்த்தக கப்பற் துறை அமைச்சர் ஜனாப் ஏ.ஆர். மன்சூர் கிண்ணியா பள்ளிவாசல்களுக்கு வழங்கினார். கிண்ணியா ஜாகுவப் பள்ளிவாசலில் இவ் வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

## மோகனரங்கம் மரணம்

அ.இ.அ.தி மு க முன்னாள் எம்.பி திரு ஆர், மோகனரங்கம் (வயது56) நேற்று முன்தினம் மாரடைப்பால் மரணமடைந்தார்.

1977-80 காலப்பகுதியில் எம்.பியாகவும் பின் ராஜ்ய சபை உறுப்பினராகவும் புதுடில்லியில் தமிழக அரசின் சிறப்புப் பிரதி நிதியாகவும் அவர் இருந்தவர்.

## ஆர்.வி.விருந்து

பாரத ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் தனது பிரிட்டிஷ் விஜயத்தின் போது மகாராணியாருக்கு விருந்தளித்து கௌரவித்தார்.

27 வருடங்களின் பிரிட்டிஷ்கான பாரத ஜனாதிபதி ஒருவரின் விஜயம் இதுவே என்பது குறிப்பிடத் தக்கது.


## விசேட அறிவித்தல்

தனியார் கல்விநிறுவன ஒன்றியம்
யாழ் மாவட்டம்

க. பொ. த. உயர்தரம் 92 பிரிவு

நடைபெற்று முடிந்த க பொ. த. சாதாரணதரப் பரீட்சையிற் தோற்றிய மாணவர்களுக்கான க பொ.த. உயர்தர வகுப்புகளை எக்காரணங் கொண்டும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகு முன்னர் ஆரம்பிக்க வேண்டாமென சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களையும் பிரத்தியேக வகுப்புக்குரிய ஆசிரியர்களையும் வேண்டிக் கொள்கின்றோம்.

தனியார் கல்விநிறுவன ஒன்றியம்
யாழ் மாவட்டம்

04066



## கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and
Computer Programming in
BASIC Language

ஆரம்பம் : 11 April 1990 3-30 p. m.
(திங்கள், புதன். வெள்ளி)

07 April 1990 11-00 a. m.
(சனி, ஞாயிறு)

● LOTUS 1-2-3
ஆரம்பம்: 10 April 1990 9-00 a m

● WORD PROCESSING
ஆரம்பம்: 07 April 1990 9-30 a. m

● COBOL
ஆரம்பம்: 12 April 1990

G. C. E. (O/L) படித்த இருபாலாரும் சேரலாம்:
மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும்
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

UNIKCO
COMPUTER CENTRE

No. 5, POWER HOUSE ROAD
2nd, Lane, JAFFNA

94065

# பொடிச் செய்திகள்

## ஒலிப்பதிவு நாடா கையளிப்பு

யாழ் இலங்கலைஞர் மன்றத் தலைவரும் பிரபல கர்நாடக இசைப் பாடகருமான திரு. பொன் சுந்தரலிங்கம் தாம்பாடிய பன்னிருதிருமுறைச் சைவப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள் தொகுதியொன்றை இந்துசமய கலாசார ராஜாங்க அமைச்சர் திரு: பி, பி. தேவராஜிடம் கையளித்தார்.

## துருக்கியின் பருப்பு அன்பளிப்பு

துருக்கிய அரசினால் இலங்கைக்கு 200 மெட்ரிக் தொன் பருப்பு இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. இதில் 100 மெட்ரிக் தொன் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கும் மிகுதி இலங்கை இராணுவத்திற்கும் வழங்கப்படும்,

## கிளி - யாழ் அலுவலர் விசேட பஸ்சேவை

கிளிநொசிக் கச்சேரியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தினமும் மாலை நேர ஊழியர்களுக்கான விசேட பஸ்சேவை நடாத்துவற்கு அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் முயற்சி எடுத்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட அரச அலுவலகங்களில் கடமை புரியும் ஊழியர்கள் அதிகவீதமானோர் யாழ்ப்பாணத்தில் இருந்தே இங்கு கடமைக்கு வருவதால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்ப்பதற்காக இவ் ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு கிளிநொச்சி இ, போ, ச.சாலை அதிகாரி திரு ஏ, தியாகராசா அரசாங்க அதிபரின் வேண்டுகோளை ஏற்று சம்மதம் தெரிவித்துள்ளார். (35)

## போதை வஸ்து சிகரட்

போதைவஸ்து சேர்க்கப்பட்ட சிகரெட் கொழும்பு நகரில் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்தபோதைவஸ்து சிகரெட் ஒன்று கொழும்பில் முப்பதுரூபாய்கு விற்கப்பட்டு வருகின்றதாகவும், கொழும்பில்' அந்த,சிகரட் என்று கேட்டால் எந்தக்கடையிலும் இது கிடைக்குமென்றும்தெரிவிக்கப் படுகின்றது.

## திருமலையில் அதிகாரிகள் குழு

யாழ் மாவட்ட உள்நாட்டு வியாபார அதிகாரிகள் குழு ஒன்று இன்று திருகோணமலையில் நடைபெறும் கூட்டம்ஒன்றில் கலந்துகொள்வதற்காக சென்றுள்ளது, இக்கூட்டத்தில் உள்நாட்டு வியாபாரம் வகிக்கட்டுப்பாடு போன்ற விடயங்கள் ஆராயப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது, (03

## போட்டிப் பரீட்சை

இலங்கைக் கடல் கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை ஒன்று வெளிநாட்டு அமைச்சின் ஆதரவில் பரீட்சைஆணையாளரினால் எதிர் வரும் 26-05-1990 இல் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

20-04-1990 அன்று 22வயதுக்கு உட்படாதவராயும் 26 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தலோடு அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் மொன்றின் பட்டதாரியாயுமுள்ளவர் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கமுடியும். (43)

---


# காலமானர்

## அருணசலம் — வேலுப்பிள்ளை

வடலியடைப்பு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைப்பாறிய இ. போ. ச. ஊழியர் அருணசலம் வேலுப்பிள்ளை 06-04-90 அன்று காலமானர். அன்னர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி, சிவஇன்பம், சச்சிதானந்தம், நிர்மலாதேவி, பரமானந்தம், (சீ-நோர் குருநகர்), சரோசாதேவி, விவேகானந்தன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), ஆனந்தராசா, ஆகியோரின் அன்புத்தந்தையும், சுப்பிரமணியம், தம்பிராஜா, செல்வராணி, பரமேஸ்வரன் (சவுதி அரேபியா), கிரிஜாம்பிகை, ஜெயராசா, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமனும், சந்திரமோகன், மதிவதனி, சந்திரகுமார், சந்திரகலா, லோகேஸ்வரி, ஜெயக்குமார் (தபாற்கந்தோர் கொக்குவில்), வசந்தாதேவி, வினோதா, ஸ்ரீகுமார். கீதா, கலா, ராஜ்குமார் புனிதா, சதானந்தன், நிமலநாதன், சர்மிளா, ஜெயஸ்ரீ ஜெயகணேஸ். பகிரதி, கஜந்தன். ரஜிந்தன், பிரதீபன், விதுலன். ரமிலன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார் அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-4-90) சனிக்கிழமை மு. ப 10·00 மணியளவில் வடலியடைப்பில் இடம் பெற்று விளாவெளி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
வே. ஆனந்தராசா

04064


---

● வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கான

# புதிய அடையாள அட்டை விநியோகம் மீள ஆரம்பம்

கடந்த சிலமாதங்களாக தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த வடகிழக்கு மாகாணங்களுக்கான புதிய தேசிய அடயாள அட்டை விநியோகம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதல்கட்ட நடவடிக்கையாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவருக்கான புதிய அடயாள அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன,

அத்துடன் தனிப்பட்ட ரீதியில் அடயாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் புதிய அடயாள அட்டை விநியோகம் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த நவம்பர் மாதத்தின் பின்னர் வடக்கு கிழக்குப் பகுதிகளில் புதிய அடயாள அட்டைபெற விண்ணப்பித்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை இதுதெரிந்து முரசொலி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது. குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் பொய்யான தகவல்கள் கொடுக்கப்பட்ட காரணத்தினாலே கடந்த 5 மாதங்களாக புதிய அடயாள அட்டை வழங்கும் சேவைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது (03)

### அரச...

மேலதிக காணிப் பதிவாளரின் முத்திரை குத்தப்பட்டிருந்தது.

### காங்கேசன்துறை...

டைய கா.விஜயகுமார் என்ற சிறுவனுமே இச்சம்பவத்தில் மரணமடைந்துள்ளார்கள் கா சுரேஷ்குமார் (12) என்ற சிறுவன் படுகாயமடைந்து யாழ் போதன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த சிறுவனும் படுகாயமடைந்த சிறுவனும் சகோதரர்களாவர். 1989ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி இதேஇடத்தில் இடம்பெற்றதற்செயலான கிரனேட் குண்டு வெடிப்பில் இதேகுடும்பத்தைச் சேர்ந்த மற்றைய இரு சகோதரர்கள் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்விடத்தில் அனாதரவாகக் கிடந்த ஷெல் ஒன்று தற்செயலாக வெடித்தபோதே இச்சம்பவம் நடந்துள்ளது இறந்த இருவரினதும் சடலங்களும் தெல்லிப்பழை வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தது.(3)

### யாழ்...

வித்தியாலயத்தில் 11-ம் திகதி காலை 9 மணி தொடக்கம் காணிக் கச்சேரி நடைபெறும்.

பருத்தித்துறைப் பகுதிக்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் 9-ம், 10-ம திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் காணிக் கச்சேரிநடைபெறும்.

தெல்லிப்பளைப் பகுதிக்கு தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் 8-ம் திகதி காலை 9 மணி தொடக்கம் காணிக் கச்சேரி நடைபெறும். (03)

---

மட்டு பல்கலைக்கழக

# மாணவர் பஸ் சேவைநிறுத்தம் ஊழியர் 'குட்டிபஸ்' பணயம்

மட்டக்களப்பு பல்கலைகழக மாணவர்கள் இதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 'குட்டி பஸ்' ஒன்றை பணயமாக பிடித்து வைத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வந்தாறு மூலையில் உள்ள கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு பன்னிரெண்டு மைல்தூரத்தில் உள்ள மாணவர் விடுதியிலிருந்து இதுவரைகாலமும் மேற்கொள்ளப்பட்டு வந்த பஸ் சேவையை மட்டக்களப்பு டிப்போ கடந்த புதன்கிழமை முதல் நிறுத்தியுள்ளது.

இச்சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரியே, பல்கலைக்கழக ஊழியர் பயணம் செய்யும் குட்டிபஸ்ஸை மாணவர்கள் 'பணயம்' வைத்துள்ளனர்.

### உள்ளே

திருமணங்கள் பலவிதம் இங்கே சில விதம் ஸ்பெஷல் றிப்போட்

3ம் பக்கத்தில்

### அதிபரின்படம்...

லிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். சோவியத் ஜனதிபதியின் படமே செய்தியறிக்கையில் மாறிக் காண்பிக்கப்பட்டதாம்.

இந்த செய்தியறிக்கையை பார்த்துக்கொண்டு இருந்த முக்கிய அரசாங்கத் தலைவரொருவர் பிழையான படம் காண்பிக்கப்பட்ட விடயத்தை ரூபவாஹினி பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் விளைவே இந்த திடீர் இடைநிறுத்தம்.

வேலைநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் தமிழ்ப் பகுதி தயாரிப்பாளர் உதயமான நிகழ்ச்சியொன்றை தயாரித்து வழங்குபவர்.

### விடுதலை...

பணிகளை நிறைவேற்ற முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் இம்முறை அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர்கள் நாட்டை நேசிப்பவர்களா அல்லது தமது பொருளாதார நிலையை கவனிப்பவர்களா என்பதை அவதானிக்க வேண்டியுள்ளது. இவ்வாறுனவர்களில் சிறிய சந்தேகம் கூட ஏற்பட்டாலும் அவர்களை தொடர்ந்தும் அமைச்சரவையில் வைத்திருக்க முடியாது' எனவும்ஜனதிபதி அங்கு தெரிவித்தார். (09)


# BECON

(ஸ்ரீதர் முன்பாக)
ஸ்ரான்லி றேட்
யாழ்ப்பாணம்.

பகல் நேர வகுப்புகள்
துரித மீட்டல் வினு விடை வகுப்புகள்
இந்து நாகரிகம் கிருஷ்ணவேணி
ஆரம்பம்: திங்கள் 2மணிக்கு
பௌதிகவியல் இக்னேசியஸ்
ஆரம்பம்: வியாழன் காலை 6,30-7.30

04060

# NEW BECON

ஸ்ரான்லி றேட்
யாழ்ப்பாணம்

## துரித மீட்டல் வகுப்பு

ஆரம்பம்: 7 - 4 90 காலை 7 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | யோகசிங்கம் | 11–12 |
| கணக்கியல் | யோகராசா | 7–8 |
| அளவையியல் | விக்கி | 12–1 |
| வர்த்தகம் | பிரபல ஆசிரியர் | 8–9 |
| தமிழ் | மீரா | 9–10 |
| இந்து நாகரிகம் | கிருஷ்ணவேணி | 1–2 |

முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்.

- ● விடுமுறை நாட்களில் நடைபெறும் வகுப்புகளின் நேர அட்டவணையை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்
- ● 91க்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன,
- ● பரீட்சைக்குரிய புத்தகங்கள் விற்பனையாகின்றன

04030


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 07.04.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற து